புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜூன் 22, 2017 | புரட்சி 16 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00

## சமூக செயல்பாட்டாளர்கள் மீது குண்டர் சட்டங்களை ஏவாதே!

## முதல்வர் வீடு முற்றுகை: 2000 பேர் கைது



தமிழீழ இனப்படுகொலைக்கு நினைவேந்தல் நடத்தியதற்காக மே பதினேழு இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி, தமிழர் விடியல் கட்சியின் ஒருங்கிணைப்பாளர்கள் டைசன், இளமாறன் மற்றும் அருண்குமார் ஆகியோர் மீது குண்டர் சட்டம் ஏவப்பட்டதைக் கண்டித்தும், அவர்களை உடனே விடுதலை செய்ய வலியுறுத்தியும் பா.ஜ.க.வின் பினாமியான முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி வீடு முற்றுகைப் போராட்டம் 17.6.2017 சனி அன்று தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பின் சார்பில் நடத்தப் பட்டது.

சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகிலிருந்து நடைபெற்ற இந்த போராட்டத்தில் பல்வேறு கட்சிகள் மற்றும் இயக்கங்களைச் சேர்ந்த தோழர்களும், தமிழ் உணர்வாளர்களும் பல்லாயிரக்கணக்கில் கலந்து கொண்டனர். அதில் 2000 தோழர்கள் கைது செய்யப் பட்டனர்.



எடப்பாடி பழனிச்சாமி அரசைக் கண்டித்தும், தமிழக செயல்பாட்டாளர்களை ஒடுக்க குண்டர் சட்டம், தேசிய பாதுகாப்பு சட்டம், UAPA என அடக்குமுறை கருப்பு சட்டங்களை ஏவுவதைக் கண்டித்தும், 4 தோழர்களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தியும் தோழர்கள் முழக்கமிட்டனர்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் வேல்முருகன் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகத் தோழர்கள், மனித நேய மக்கள் கட்சி பொதுச் செயலாளர் அப்துல் சமது, விடுதலை சிறுத்தைகள் கட்சி பொதுச் செயலாளர் வன்னி அரசு, SDPI (சோசியல் டெமாக்ரடிக் பார்ட்டி ஆஃப் இந்தியா) கட்சியின் மாநிலத் தலைவர் தெகலான் பாகவி, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளர் கு.ராமகிருஷ்ணன், தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் நாகை திருவள்ளுவன், விடுதலை தமிழ்ப் புலிகள் கட்சியின் தலைவர் குடந்தை அரசன், தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் கே.எம்.ஷெரீஃப், தமிழக மக்கள் முன்னணியின் தலைவர்கள் அரங்க குணசேகரன், பொழிலன், தற்சார்பு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் கி.வெ.பொன்னையன், தமிழ்த் தேசியப் பேரியக்கத்தின் அருணபாரதி, பச்சைத் தமிழகம் கட்சியின் தலைவர் உதயகுமார், ஆதித் தமிழர் கட்சியின் வென்மணி, தமிழ்த்தேசிய விடுதலை இயக்கம் தியாகு, தமிழர் விடியல் கட்சி நவீன், தமிழர் தேசிய முன்னணியின் இறை எழிலன், தமிழர் விடுதலைக் கழகம் சுந்தரமூர்த்தி, காஞ்சி மக்கள் மன்றம் மகேசு, காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம் முகிலன், தமிழ்த் தேச குடியரசு இயக்கம் செந்தமிழ்வாணன், அம்பேத்கர் சிறுத்தைகள் இயக்கம், டிசம்பர் 3 இயக்கம், சிபிஎம்எல் (மக்கள் விடுதலை) கட்சியின் தலைவர் மீ.த.பாண்டியன், வழக்கறிஞர் பாவேந்தன், வழக்கறிஞர் ராமராஜ், நெடுவாசல் போராட்டக் குழு திருமுருகன், குமுக விடுதலை இயக்கம் சேகர், சமூக நீதி மாணவர் இயக்கம், தமிழ் வழிக் கல்வி இயக்கம் சின்னப்பத் தமிழர், கி.த.பச்சையப்பன், மே பதினேழு இயக்க ஒருங்கிணைப் பாளர் அருள்முருகன் மற்றும் மாணவர்கள், இளைஞர்கள், தமிழ் உணர்வாளர்கள் இந்த முற்றுகைப் போராட்டத்தில் திரளாக கலந்து கொண்டனர்.

மாலை 4.30 மணியளவில் கைது செய்யப்பட்டு பல்வேறு மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டு இரவு விடுதலை செய்யப்பட்டனர்.

---

### ஆரியப் பார்ப்பனர் மேலானவர் என்ற பொய்மையை தகர்த்தெறிந்த மரபணு ஆய்வு

பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்கள் ‘பிராமணர்கள்’; தோளில் பிறந்தவர்கள் ‘சத்திரியர்’; தொடையில் பிறந்தவர்கள் ‘வைசியர்’; காலில் பிறந்தவர்கள் ‘சூத்திரர்’ இவர்கள் அடிமையானவர்கள் என்று சமூகத்தை பிறப்பின் அடிப்படையில் கூறு போட்டு வருகிறது பார்ப்பனியம்.

“சூரிய சந்திரன் தோன்றிய காலத்திலிருந்தே இருந்து வருவது ஆரிய இனம்; இதற்கு தோற்றமே இல்லை. நாம் எல்லோரிலும் உயர்ந்தவர்கள்” என்று கூறுகிறார், ஆர்.எஸ்.எஸ்.சுக்கு தத்துவத்தை உருவாக்கிய கோல்வாக்கர்.

ஆரியர்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். அவர்களின் வேத கலாச்சாரமே ‘பாரத’த்தின் கலாச்சாரம். ‘அவாளி’ன் சமஸ்கிருதப் பண்பாடே புனித மானது” என்று இப்போதும் பார்ப்பனியம் வரலாற்றைக் கட்டமைக்கிறது.

அனைத்து வாதங்களையும் தவிடுபொடியாக்கும் ஆய்வு சர்வதேச விஞ்ஞானிகளால் இப்போது கண்டறியப்பட்டுள்ளது. பிரிட்டன் ஹர்ட்டர்ஸ் ஃபீல்டு பல்கலைக் கழக விஞ்ஞானி பேராசிரியர் மார்ட்டின் பி. ரிச்சர்ட்ஸ் தலைமையில் 16 விஞ்ஞானிகள் நடத்திய ஆய்வு 3 மாதங்களுக்கு முன்பு விஞ்ஞான ஆய்வு இதழில் (BMC Evolutionary Biology) வெளியிடப்பட்டு உலகம் முழுதும் பரபரப்பை உருவாக்கியுள்ளது.

சிந்து சமவெளி நாகரிகத்தின் இறுதிப் பகுதியில் சமஸ்கிருத மொழியுடன் ஆரியர் வந்தனர்; தங்கள் பண்பாட்டை திணித்தனர். இந்த வரலாற்றை மரபணு சோதனை வழியாக உறுதிப் படுத்துகிறது இந்த ஆய்வு. அனைத்து இனங்களும் இடப் பெயர்வுகளுக்கும் கலப்புக்கும் உள்ளானவர்களே என்று ஆய்வு கூறுகிறது.

இது குறித்து விரிவான கட்டுரையை ‘இந்து’ ஆங்கில நாளேடு (ஜூன் 7, 2017) வெளியிட்டிருக்கிறது. மரபணு அடிப்படையில் நவீன அறிவியலுடன் நடத்தப்பட்ட இந்த ஆய்வு குறித்து விரிவான தகவல்கள் அடுத்தடுத்து வெளிவரும்.

பிறப்பின் அடிப்படையில் ஏற்றத் தாழ்வுகளை ஒரு கட்டத்தில் ஆரியர்கள் உருவாக்கினார்கள். பிறப்பினால் உயர்ந்தவர் என்று எவரும் கிடையாது. அனைவரும் குடி பெயர்ந்தவர்கள்தான்.

வானமும் பூமியும் தான் நம் அனைவருக்கும் வீடு என்பதை திட்டவட்டமாக உறுதிப்படுத்தி விட்டது இந்த ஆய்வு என்று ‘இந்து’வில் கடிதம் எழுதியிருக்கிறார் ஒரு வாசகர்.

# பார்ப்பன பண்ணையம் கேட்பாரில்லை

# பிரணாப் முகர்ஜி ஜெயேந்திரனிடம் ஆசி பெறலாமா?

வங்காளிப் பார்ப்பனர் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிக்காலம் ஜூலை 24இல் முடிவடைகிறது. 'பார்ப்பன தர்மத்தோடு' வாழ்ந்தவர். பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே அவசர அவசரமாக காஞ்சிபுரம் வந்து, சங்கராச்சாரியிடம் ஆசீர்வாதம் பெற்றிருக்கிறார். ஜெயேந்திர சரசுவதி, சங்கர்ராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முதல் குற்றவாளி. புதுவை நீதிமன்றம் அவரை வழக்கிலிருந்து விடுதலை செய்தது. அரசு தரப்பு சாட்சிகள் எல்லாம் பிறழ் சாட்சிகளாக மாற்றப்பட்டனர். புதுவை நீதிபதியிடம் தனக்கு சாதகமாக தீர்ப்பு வழங்க தொலைபேசியில் பேரம் பேசியவர் ஜெயேந்திரர்.

இது ஆதாரத்துடன் அம்பலமாகி, உயர்நீதிமன்றத்திலும் வழக்காக பதிவாகியுள்ளது. இந்த வழக்கை விரைந்து முடிக்க வேண்டும் என்றும், புதுவை நீதிமன்றம் ஜெயேந்திரரை விடுதலை செய்ததை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ஏன் மேல் முறையீடு செய்யவில்லை என்றும் கேட்டு, அண்மையில் சென்னை உயர்நீதிமன்றம், ஜெயேந்திரனைக் காப்பாற்ற முயன்ற சக்திகளின் தலையில் குட்டு வைத்திருக்கிறது. இதையெல்லாம் ஒதுக்கிவிட்டுத் தான் குடியரசுத் தலைவர் ஜெயேந்திரனிடம் ஆசி பெற வந்திருக்கின்றார்.

ஜெயேந்திரனிடம் ஆசி பெற்றுவிட்டு டெல்லி திரும்பியவுடன் ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்தை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு சிறப்பு விருந்தினராக அழைத்து விருந்து பரிமாறியிருக்கிறார். அரசியல் சட்டத்துக்கு எதிராக இந்தியாவை இந்து இராஜ்யமாக்க வேண்டும் என்ற கொள்கை கொண்ட இயக்கத்தின் தலைவர் மோகன் பகவத்.

இவ்வளவுக்குப் பிறகு - தூக்குத் தண்டனையிலிருந்து விடுவிக்க கருணையோடு தம்மிடம் வந்துள்ள இரண்டு கருணை மனுக்களையும் கடைசி நேரத்தில் தள்ளுபடி செய்திருக்கிறார்.

தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று உலகம் முழுதும் குரல் வலுத்து வருகிறது. அய்.நா. தூக்குத் தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்கிட வேண்டும் என்று உலக நாடுகளை வற்புறுத்தி வருகிறது. இந்த நிலையில் அரிதிலும் அரிதான வழக்குகளில் தூக்குத் தண்டனை வழங்கலாம் என்று இந்திய உச்சநீதிமன்றம் கூறுகிறது. அரிதிலும் அரிதான வழக்கு எது என்பதை முடிவு செய்வது நீதிபதிகளிடமே இருக்கிறது. தூக்குத் தண்டனை பெற்றவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள கடைசி புகலிடமாக இருப்பது குடியரசுத் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள 'கருணை' மனுக்கள் பற்றிய முடிவெடுக்கும் அதிகாரம்தான்.

குடியரசுத் தலைவர் பதவிக்கே பெருமை சேர்த்த கே.ஆர்.நாராயணன், தம்மிடம் கருணை கோரி வந்த மனுக்களை நிராகரிக்காமல் மாளிகையிலேயே கிடப்பில் போட்டு விட்டார். அதேபோல் குடியரசுத் தலைவராக இருந்த பிரதிபாபட்டீல் 30 தூக்குத் தண்டனை கைதிகளின் கருணை மனுக்களை ஏற்று தூக்கிலிருந்து அவர்களை விடுவித்தார். குடியரசுத் தலைவராக இருந்த இராதாகிருஷ்ணன், அப்துல்கலாம் ஆகியோரும் தூக்குத் தண்டனைக்கு எதிரான கருத்துடையவர்களாகவே இருந்தனர்.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் எழுப்பப்பட்ட கேள்விக்கு மத்திய அரசு வெளியிட்ட தகவலின்படி, கடந்த 1991 முதல் 2001 வரை குடியரசுத் தலைவர்கள் 77 கருணை மனுக்கள் மீது முடிவெடுத்தனர். அவற்றில் 69 மனுக்களை நிராகரித்துள்ளனர். பிரணாப் முகர்ஜி தனது பதவி காலத்தில் 30 கருணை மனுக்களை நிராகரித்துள்ளார். கொலை வழக்கு விசாரணைக்கு உள்ளான காஞ்சிபுரம் ஜெயேந்திரனிடமும் ஆசி பெற்றிருக்கிறார்.

குடியரசுத் தலைவர்களிலேயே கருணை மனுக்களை அதிக அளவில் நிராகரித்தவர் தமிழ்நாட்டுப் பார்ப்பனர் ஆர்.வெங்கட்ராமன். 1987 முதல் 1992 வரையிலான பதவிக் காலத்தில் 44 கருணை மனுக்களை அவர் நிராகரித்துள்ளார். இவர் காஞ்சிபுரம் சங்கராச்சாரி மடத்தின் பிரதிநிதியாகவே செயல்பட்டவர். ஜெயேந்திர சரசுவதி - மூத்த சங்கராச்சாரியிடம் சண்டை போட்டுக் கொண்டு மடத்தை விட்டு இரகசியமாக வெளியேறியபோது பதறிப் போய் தனது மனைவியை காஞ்சிபுரம் மடத்துக்கு அனுப்பி வைத்து, சமரச முயற்சிகளில் இறங்கியவர் ஆர்.வெங்கட்ராமன். அப்போது அவர் குடியரசுத் தலவராக இருந்தார்.

பார்ப்பனர்கள் கிரிமினல் குற்றவாளிகளாக இருந்தாலும் அவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்களே என்ற 'மனு சாஸ்திரம்' இப்போதும் நடைமுறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட சான்றுகள் வேண்டுமா?

# காந்தியை ஜாதி கூறி விமர்சித்த அமீத் ஷா

பா.ஜ.க. தலைவர் அமீத் ஷா, காந்தியை அவரது ஜாதிப் பெயரைக் கூறி விமர்சித்திருக்கிறார். "அவர் ஒரு சாதுர்யமான பனியா. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரிந்தவர். அதனால் காங்கிரசை கலைக்கச் சொன்னார்" என்று பேசி இருக்கிறார். அமெரிக்காவில் வாழும் காந்தியின் பேரன் ராஜ்மோகன் காந்தியும், மற்றொரு பேரனும், மேற்கு வங்க ஆளுநராக இருந்தவருமான கோபால கிருஷ்ண காந்தியும் அமித்ஷாவின் இந்த பேச்சுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். பிரபல வரலாற்று ஆய்வாளர் இராமச்சந்திரா குகாவும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அமீத்ஷா கூறிய 'சாதுர்ய பனியா' என்ற காந்தி மீதான விமர்சனத்தைத் தொடர்ந்து பனியா, பார்ப்பனர் உள்ளிட்ட பல்வேறு ஜாதிக் குழுக்கள் பற்றி ஆங்கில ஏடுகள் கட்டுரைகளை வெளியிட்டு வருகின்றன. 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு (ஜூன் 17, 2017) வெளியிட்ட ஒரு கட்டுரையில் வர்ணாஸ்ரம சமூக அமைப்பில் பார்ப்பனர், சத்திரியருக்குக் கீழே பனியாக்கள் வைக்கப்பட்டிருப்பதை பனியாக்கள் விரும்பவில்லை என்று எழுதியிருக்கிறது. குஜராத் சமூகத்தில் ஜாதியின் அடிப்படையிலேயே மனிதர்கள் மதிக்கப்படுகிறார்கள் என்றும் அக்கட்டுரை கூறுகிறது.

அதே நேரத்தில், தங்களை சமூகத்தில் மிக உயர்வானவர்களாக கருதிக் கொண்டிருக்கும் 'பார்ப்பனர்களை' இழிவாகவும் 'கெட்ட சகுனக்காரர்கள்' என்றும் பார்க்கும் கண்ணோட்டமும் இருப்பதை இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. தீபன்கர் குப்தா எழுதியுள்ள அக்கட்டுரையில் இவ்வாறு கூறுகிறார்:

"பஞ்சாபிலிருந்து திருவாங்கூர் வரை பல சமூகப் பிரிவினர், 'பிராமணர்'களை அபசகுன மிக்கவர்கள்; அவர்கள் கண்பட்டாலே கெட்டதுதான் நடக்கும் என்று கருதக் கூடிய சமூகங்கள் இருக்கின்றன. உதாரணமாக மேற்கு கேரளாவில் குரிச்சான்கள் (Kuricchans) என்ற சமூகத்தினர், ஒரு 'பிராமணர்' தங்கள் வீட்டுக்குள் நுழைந்து விட்டால், உடனே 'கெட்ட நிகழ்வு' என்று கருதி, அந்தத் தீங்குகளை விரட்டும் சடங்குகளை செய்வது இப்போதும் வழக்கத்தில் உள்ளது. பஞ்சாபில் ஏதாவது ஆபத்து, விபத்து நிகழ்ந்துவிட்டால், உடனே 'பிராமணர்' எவராவது சம்பந்தப்பட்டிருப்பாரா? கண்பட்டிருக்குமா? தலையிட்டிருப்பாரா?" என்றுதான் தங்கள் சிந்தனையை ஓட விடுவார்கள். ஒரு டிராக்டர் பழுதாகிவிட்டால், 'பிராமணர்' எவராவது வயலுக்கு வந்தாரா என்றுதான் முதலில் நினைத்துப் பார்ப்பார்கள். குஜராத்தில் 'பிராமணர்'களைவிட தாங்களே உயர்வானவர்கள் என்பதுதான் 'பனியாக்கள்' மனநிலையாக இருக்கும். பார்ப்பனர்கள் உயர்ந்தவர்களைப்போல் நடிக்கிறார்கள் என்று பனியாக்கள் கூறுவார்கள். ஜாதி அமைப்பு 'தலித்' மக்களை இழிவுபடுத்துகிறது என்பது நமக்குத் தெரியும். உண்மையில் இந்து சதுர்வர்ண வர்ணாஸ்ர அமைப்பு பல்வேறு ஜாதிகள் ஒருவரை மற்றவர் இழிவாகவும் தாழ்வாகவும் கருதும் மனநிலையிலேயே வைத்திருக்கிறது. ஒரு மனிதனின் பெருமை, பிறப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கும் உரிமை புனித நூல்களில் இல்லை. அவன் வாழ்ந்து காட்டும் சிறப்பான திறந்த புத்தகத்தில் தான் இருக்கிறது" என்று முடிகிறது அக்கட்டுரை.

# பவானியில் கழகக் கூட்டம்

19.05.2017 வெள்ளி மாலை 6.00 மணிக்கு ஈரோடு வடக்கு மாவட்டம் பவானி திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் "மத்திய அரசும் தமிழக மக்களின் உரிமைகளும்" என்ற தலைப்பில் கொடியேற்ற நிகழ்வுடனும் டிகே.ஆர். பகுத்தறிவு இசை நிகழ்ச்சியுடன் துவங்கியது. நிகழ்வுக்கு முன்னதாக பவானி பழைய பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்டிருந்த கொடி கம்பத்திலும், அந்தியூர் பிரிவில் உள்ள கொடிக்கம்பத்திலும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கொடி ஏற்றினார்.




தொடக்கத்தில் பகுத்தறிவு பறை இசை, பாடல்கள் மேடையில் இசைக்கப்பட்டன. வேல்முருகன் வரவேற்புரையாற்ற, மாவட்ட செயலாளர் வேணுகோபால் கூட்டத்துக்குத் தலைமையேற்றார். மாவட்ட தலைவர் நாத்திகஜோதி, தலைமை கழக பேச்சாளர் வேலுச்சாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றம் சுந்தரம், மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, மாநில வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோரை தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த வழக்குரைஞர் ப.பா.மோகன், 'இன்றைய கால கட்டத்தில் அடிப்படை உரிமைகளை மீட்டெடுக்க வேண்டுமென்றால் பெரியாரியமும், அம்பேத்கரியமும் மட்டுமல்லாமல் மார்க்ஸியமும் தேவை' என்ற கருத்தை முன்வைத்து உரையாற்றினார்.

தொடர்ந்து கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி, "ஒடுக்கப்பட்டு வந்த சமுதாயத்திலிருந்து வந்த பல தலைவர்களின் பிறந்த நாள்களை சமூக அக்கறையுடன் கொண்டாடுவது போல், பி.ஜே.பி இந்துத்துவ சக்திகள் அம்மக்களின் பேராதரவைப் பெறுவதற்கு நாடகம் ஆடுகிறார்கள் என்றும், அம்பேத்கர் ஜெயந்தி என்று சொல்லி அம்பேத்கரை உள்வாங்க முயற்சிக்கலாம், ஆனால் பெரியாரைத் தொட்டுவிட முடியாது" என்று தனது உரையில் குறிப்பிட்டார்.

கூட்டத்தின் இறுதிவரை பொதுமக்கள் உற்சாகமாக கருத்துக்களைக் கேட்டனர். இறுதியாக பவானி ஒன்றிய செயலாளர் வினோத் நன்றியுரையாற்றினார். கூட்டத்தின் நிறைவில் தோழர்கள் அனைவருக்கும் மாட்டுக் கறி உணவு வழங்கப்பட்டது.

# பெரியார் ஒருவரே நவீனத்தின் அடையாளம்

மார்க்சிய சிந்தனையாளரும் இந்திய தத்துவ மரபுகள் குறித்து ஆய்வு நூல்களை எழுதியவருமான பேராசிரியர் ந.முத்து மோகன், 'உங்கள் நூலகம்' மாத இதழுக்கு (ஏப். 2017) அளித்துள்ள பேட்டி இது. (கடந்த இதழ்களின் தொடர்ச்சி)

*தேசியம் எதிர் காலனியம் – ஏகாதிபத்தியம் என்ற முரண்நிலை சட்டகங்களுக்குள், பெரியார், அம்பேத்கர் போன்ற சாதி எதிர்ப்புத் தலைவர்கள் காலனியத்திற்கு ஆதரவாளர் என்றும் விமர்சனம் செய்துவருகின்றோம். இந்த முரண்நிலை சட்டகம் இன்னும் நம்மிடையே வலுவாக இருக்கின்றது. இந்த விமர்சனத்தை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?*

இந்தியாவில் காலனியம் குறித்த விவாதங்கள் இன்னும் முழுமை அடையவில்லை. இன்னும் இந்த விவாதங்களில் குறைபாடுகள், இடைவெளிகள் இருக்கின்றன. வரலாற்றுரீதியாக அதிகமாக இந்தியச் சமூகம் தேங்கி நின்றதைக் காலனியம் உடைத்து, முன்னுக்குத் தள்ளியது என்பார் மார்க்ஸ். கம்யூனிஸ்ட் அறிக்கையில் மார்க்ஸ் ஒன்றரை பக்கத்திற்கு முதலாளியத்தின் புரட்சிகரமான பணிகள் என்று சில விசயங்களைக் குறிப்பிடுவார். நிலவுடைமைமுறை உறவுகளை உடைத்தெறிந்து, இதுவரை கல் போல உறைந்து கிடந்த மதிப்பீடுகள், உறவுகள் எல்லாம் காற்றாகிக் கரைந்து விடுகின்றன. அன்பு, பாசம், குடும்பம், காதல். நட்பு என்பது போன்று வைத்திருக்கின்ற விசயங்களை யெல்லாம் முதலாளித்துவம் உடைத்தெறிந்து விடுகின்றது என்பார் மார்க்ஸ்.

இந்த மதிப்பீடு தவறு என்று சொல்ல முடியாது. முதலாளித்துவத்தின் புரட்சிகரமான பணிகள் என்றொரு பகுதி மார்க்சியத்தில் உண்டு. முதலாளித்துவம் அதனுடைய பணிகளைச் செய்துமுடிக்கும், அதற்குப் பிறகு முதலாளித்துவம் உருவாக்கும் தொழிலாளி வர்க்கம் அப்பணிகளை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என்ற பார்வையை மார்க்சே உருவாக்கி யுள்ளார். 1853-க்குப் பிறகு முதலாளித்துவ அரசுகளே புரட்சித் தன்மைகளை இழந்துவிட்டன என்ற முடிவுக்கு வரும்போதுதான், மார்க்ஸ், கம்யூனிஸ்ட் அறிக்கையின் நிலைப்பாடுகளைக் கடந்து செல்வார். இதற்குப் பிறகுதான் விவசாயிகளுடன் கூட்டணி என்ற போர் தந்திரத்தை மார்க்சும் எங்கெல்சும் உருவாக்குவார்கள். இது மார்க்சியத்திற்கு உள்ளே அமைந்துள்ள சில வளர்ச்சி கட்டங்கள்.

அனுபவரீதியாக முதலாளியத்திற்கு முற்போக்கு பாத்திரம் ஏதுமில்லை, அவர்கள் நிலப்பிரபுத்துவத்துடன் கூட கூட்டுச்சேர்ந்து கொள்கிறார்கள் என்பது தெரிந்தவுடன்தான் மார்க்சும் எங்கெல்சும் விவசாயிகளுடன் கூட்டணி என்ற முடிவுக்குச் செல்கிறார்கள். இதற்கு முந்தி விவசாயி வர்க்கம் உடைமை வர்க்கம், குட்டி முதலாளிய வர்க்கம் என்பது போன்ற விமர்சனங்களெல்லாம் உண்டு. பிறகு இந்த நிலைப்பாடுகள் சற்று மாறின. பிற்காலத்தில் ரஷ்ய விவசாயி, சீன விவசாயி, இந்திய விவசாயி ஆகியோரைப் பற்றியெல்லாம் மார்க்ஸ் கொஞ்சம் வித்தியாசமாகப் பேசுவார்.

காலனியம் (ஒரு நாட்டை தனது பிடிக்குள் வைத்திருக்கும் அன்னிய ஆட்சிதான் காலனியம்) பற்றிப் பேசும்போது இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், காலனியம் ஒரே நேரத்தில் காலனியமாகவும் முதலாளியமாகவும் இருக்கின்றது. காலனியம் என்பது மிக மோசமான முதலாளியம் என்ற கருத்தும் உண்டு. காலனியம் ஒரு வரலாற்றுக் காரணி என்ற கருத்தும் உண்டு. காலனியத்தின் பாத்திரம் என்ன என்பது மார்க்சியத்தில் சிக்கலான இடம். அந்தச் சிக்கல் மார்க்சின் எழுத்துகளில் உள்ளது. இன்னும் மார்க்சியத்தில் அந்தச் சிக்கல் நீடித்து வருகின்றது. அந்தச் சிக்கல் அம்பேத்கர் எழுத்துகளிலும் பெரியாரின் எழுத்துகளிலும்கூட இருக்கின்றது.

இந்தியாவில் மிகவும் உறைந்து போன பழமைக் கூறுகளை அடித்து நொறுக்கும் வேலையை, ஐரோப்பாவில் முதலாளித்துவம் செய்ததைப் போல, இங்குக் காலனியம் செய்யும் என்ற எதிர்பார்ப்பு பெரியார், அம்பேத்கர் ஆகியோரிடம் இருந்துள்ளது. இன்றும் கூட தலித், பெரியார் இயக்க அமைப்புகளில் இன்றைய இந்திய ஆட்சியில் இருப்பதைவிட, பிரிட்டிஷ் ஆட்சியில் சில அனுகூலமான நிலைமைகள் நிலவின என்ற எண்ணம் இருக்கின்றது. அதனால் காலனியம் குறித்த விவாதங்கள் இன்னும் நடைபெற வேண்டியுள்ளது.

காலனியம் குறித்த கேள்வியை மீண்டும் ஒருமுறை எழுப்பி, காலனியத்தின் பண்புநிலைகள் குறித்து முழுக்க எதிர் நிலையான மதிப்பீடுகளை முன்வைத்து மறுதலிக்கும் பின்னைக் காலனிய விவாதங்கள்



**நவீனத்தை நம் பண்பாட்டில் வேர் கொள்ளச் செய்ய நமக்குப் பெரியார் தேவைப்படுகின்றார்**

இப்போது நடந்து வருகின்றன. வங்காளத்தில் பார்த்த சடர்ஜியும் கியோனேந்திர பான்டேயும் அவரது கூட்டாளிகளும், அடித்தள மக்கள் நோக்குநிலை - சபால்டர்ன்னில் தொடங்கி, பின்னைக் காலனிய நோக்கிலான ஆய்வுகளை முன்னெடுக்கின்றனர். அடித்தள மக்கள் நோக்குநிலையும் பின்னைக் காலனியப் பார்வைகளும் இணையும்போது காலனிய தேசியம் பற்றிய புதிய உரையாடல்கள் முன்னுக்கு வருகின்றன. அந்த உரையாடல்களில்தான் தேசியம் எந்த அளவுக்குக் காலனிய முதலாளியத்தின் கூறுகளை உள்வாங்கிக் கொண்டுள்ளது என்ற விமர்சனம் முன்வைக்கப் பட்டுள்ளது. பெரியாரின் தேசியம் குறித்த நிலைப்பாடுகளுடன் அவற்றை ஒப்பிட முடியும்.

ஆகவே முதலாளியம், காலனியம், தேசியம் பற்றிய மார்க்சிய நிலைப்பாடுகள், அம்பேத்கர் நிலைப்பாடுகள், பெரியார் நிலைப்பாடுகள் ஆகியவற்றை உடன்வைத்து நோக்கி, ஆழமாகச் சிந்தித்து, மதிப்பிட வேண்டும். எடுத்த எடுப்பிலேயே, அம்பேத்கரும் பெரியாரும் காலனிய ஆதர வாளர்கள், ஏகாதிபத்திய ஆதரவாளர்கள் என்று வரையறுப்பது சரியாக இருக்காது. இந்த உரையாடலை எம்.எஸ்.எஸ். பாண்டியனின் Brahmin and Non-Brahmin, Nations Without Nationalism போன்ற ஒரு சில நூல்கள் முன்னெடுத்துள்ளன. இதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும்போதுதான் தெளிவுகள் கிடைக்கும்.

காலனிய இந்தியாவில், பெரியாரின் நவீனம் எனபது ஒரு மாற்று நவீனம் என்ற நோக்கில் விவாதத்திற்கு உட்படுத்த வேண்டும். அதில் சாதி-வருண எதிர்ப்பு, சனாதன எதிர்ப்பு, இந்துத்துவ எதிர்ப்பு ஆகிய இந்தியக் கூறுகளும், ஐரோப்பியக் கூறுகளும் கலந்து இருக்கலாம். பெரியாரின் நவீனத்திற்கு ஒரு விடுதலை அரசியல் உண்டு. அந்த விடுதலை அரசியல் ஒரு incomplete project, அதாவது நிறைவு பெறாத செயல்திட்டம். இந்த இடத்தில் ஹெபர்மாஸ் பயன்படுத்திய incomplete project என்ற சொல்லைப் பயன்படுத்திச் சொல்ல விரும்புகிறேன். அந்த விடுதலை அரசியலை முழுவதும் சாத்தியப்படுத்த வேண்டும். அதை முழுவதும் சாத்தியப்படுத்த திராவிட இயக்க தேர்தல் அரசியல் கட்சிகளால் முடியாது; அவை இடமளிக்காது. உண்மையில் அந்த அரசியல் கட்சிகளைவிட பெரியார் ரொம்ப பெரியவர், வலுவானவர்.

நவீனம் என்பதை இந்தியச் சூழல்களில் பெரியார் அமரச் செய்திருக்கின்றார்; தொழிற்படச் செய்திருக்கின்றார். ஐரோப்பிய நவீனத்தை அப்படியே மொன்னையாக இங்கே எடுத்து ஒட்டக் கூடாது. அப்படி ஒட்டுவது அல்ல பெரியாரின் நவீனம். ஐரோப்பாவில் நடந்தது போன்ற பெருந்தொழில்மயமாக்கல், தேசிய அளவிலான பெருநிறுவனங்கள் உருவாக்கல் ஆகியவை அல்ல நவீனம். சாதி-வருண எதிர்ப்பு, சனாதன இந்துத்துவ எதிர்ப்பு, நம் சுயத்திலிருந்து நவீன வாழ்க்கைமுறை வளர்த்தல் ஆகியவை தாம் பெரியார் நவீனம். இப்போது இந்தியாவில் நடந்துகொண்டிருக்கும் நவீனமாக்கல் என்பது, இந்தியாவை ஐரோப்பாவிற்குத் திறந்துவிடுவது அவ்வளவுதான், வேறொன்றுமில்லை.

நவீனத்தை நம் பண்பாட்டில் வேர்கொள்ளச் செய்ய நமக்குப் பெரியார் தேவைப்படுகின்றார். பெரியாருக்கு முன்பு நவீனத்தைத் தமிழ்ப் பண்பாட்டில் வேர்கொள்ளச் செய்யும் பணியை அயோத்திதாசர் தொடங்கி வைத்தார். நவீனத்தைப் பண்பாட்டில் வேர் கொள்ளச் செய்ய நம்முடைய ஜீவா, நாவா (நா.வானமாமலை) போன்றோரெல்லாம் உழைத்துள்ளனர். ஆனால் அதனை பெரியார் இல்லாமல் செய்ய முடியாது. பெரியார்தான் திராவிட-தமிழ் அடையாளத்தை முழுக்கவும் வலிமையாகவும் ஒரு எதிர்ப்பு அடையாளமாக உருவாக்கியுள்ளார். பெரியார் இல்லாமல் இந்த எதிர்ப்பு அடையாளத்தை வேறு எவராலும் உருவாக்கியிருக்க முடியாது. எனவே தான் பெரியாரே நமது நவீன அடையாளமாகிறார். (நிறைவு)

## சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் : மாநாட்டு அனுபவங்களை தோழர்கள் பகிர்ந்தனர்


**திராவிடர் விடுதலைக் கழக சென்னை மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 15.6.2017 மாலை 7 மணியளவில் தலைமைக் கழகத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கூடியது. ஜூன் 4ஆம் தேதி கழகத்தின் மாநாடு, ஜூன் 5ஆம் தேதி நடந்த இந்தி அழிப்புப் போராட்டம் குறித்தும் மாநாட்டில் நிறை குறைகளை தோழர்கள் விவாதித்தனர். குறிப்பாக மாநாட்டையொட்டி 15 நாட்கள் நகரின் பல்வேறு பகுதிகளில் மக்களிடம் துண்டறிக்கைகளை வழங்கி, ரூ.10, 20 என்று நன்கொடை திரட்டியபோது மக்களிடமிருந்து வந்த கேள்விகள், பாராட்டுகள், ஆதரவுகள் அதன் வழியாகப் பெற்ற அனுபவங்களைத் தோழர்கள் பகிர்ந்து கொண்டனர். மாநாட்டு வசூல் பணியில் பங்கேற்ற வடசென்னை பெண் தோழர் ராஜீ மற்றும் விவேக், மாணவர் கழகப் பொறுப்பாளர் ஜெயப் பிரகாசு, பிரபாகரன், யுவராஜ், இராவணன், அய்யனார், தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர், வழக்கறிஞர் துரை அருண் ஆகியோர் பேசினர். மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, மாநாட்டு வரவு செலவு கணக்குகளை சமர்ப்பித்து நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.**

**பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் இந்த மாநாட்டை முழுமையாகப் பொறுப்பேற்று செயல்பட்ட இளம் தோழர்களையும் அவர்கள் ஒன்றுபட்ட தோழமை உணர்வோடு களப்பணியாற்றியதையும் பாராட்டினார். தமிழ்நாட்டுக்கு தனி அரசியல் சட்டம் வேண்டும் என்று வலியுறுத்தி, இந்த சென்னை மாநாட்டில் கழகம் முதன்முறையாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பது இந்த மாநாட்டின் வரலாற்றுச் சிறப்பு என்று குறிப்பிட்டார். மாவட்ட தலைவர் வேழவேந்தன் நன்றி கூறினார்.**

**சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்களாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்பட்டார்கள்:**

**விவேக் (தென் சென்னை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்), வில்லிவாக்கம் செந்தில் (வடசென்னை மாவட்ட செயலாளர்), ராஜீ (அறிவியல் மன்ற அமைப்பாளர்). திருவல்லிக்கேணி பகுதி கழகம் : இலட்சுமணன் (தலைவர்), அருண் (செயலாளர்), பிரபாகரன் (அமைப்பாளர்). திருவான்மியூர் பகுதி : தேன்ராஜ் (அமைப்பாளர்)**

## உடல் மருத்துவக் கல்லூரிக்கு கொடை: குமரி மாவட்ட எல்லைப் போர் வீரர் செல்லம் முடிவெய்தினார்



குமரி மாவட்ட விடுதலைக்காக மார்சல் நேசமணி தலைமையில் போராடிய மொழிப்போர் போராளியும் தற்போதைய திராவிடர் விடுதலைக் கழக ஆதரவாளருமான தோழர் செல்லம் (அகவை 80), தொடுகுளம், காஞ்சிரகோடு, 16.06.2017 அன்று அதிகாலை மரணமடைந்தார். அவரின் வீரவணக்க நிகழ்வு கழகத் தோழர் அனீஸ் தலைமையில் நடைப்பெற்றது. தோழர்கள் நீதி அரசர், தமிழ் மதி, மணிமேகலை, 'மார்த்தாண்டம் மாலை' பத்திரிகை ஆசிரியர் செபக்குமார், கிறித்துதாஸ் ஆகியோர் உடல் தானம் பற்றிய அறிவியல் செய்திகளை இரங்கல் செய்தியாக பேசினர். தோழர்கள் இளங்கோ, விஷ்ணு, சூசையப்பா, கருணாநிதி, ஜான் மதி, அருள் ராஜ், பிரேம லதா, இராசேந்திரன், கம்யூனிஸ்ட் ஜெயன் ஆகியோரின் வீரவணக்க முழக்கங்களுடன் அவரின் இறுதி விருப்பப்படி ஆசாரிப்பள்ளம் மருத்துவக் கல்லூரி மாணவர்களின் படிப்பிற்காக மருத்துவ உடற்கூறியியல் துறைக்கு உடல் வழங்கப்பட்டது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘பசு’ச் சட்டத்தை எதிர்த்து திருச்செங்கோட்டில் கழகம் முற்றுகைப் போராட்டம்



சந்தையில் இறைச்சிக்கான மாடு விற்கத் தடை என்ற மத்திய அரசின் ஆணையை நீக்க வலியுறுத்தி, கடந்த மே மாதம் 31 ஆம் தேதி நாமக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின்சார்பில் திருச்செங்கோடு பாரதஸ்டேட் வங்கி முன் முற்றுகைப் போராட்டம் நடந்தது.

நிகழ்வுக்கு மாவட்ட அமைப் பாளர் வைரவேல் தலைமையேற்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி மற்றும் திருச்செங்கோடு, பள்ளி பாளையம், மல்லை பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் உட்பட 21பேர் கைது செய்யப்பட்டனர். பிறகு மாலை 6 மணிக்கு மேல் அனைவரும் விடுவிக்கப் பட்டனர்.

## தமிழர்கள் மதுவிற்கு அடிமையாவது ஏன்? அரு. கோபாலனின் ‘அரிய’ கண்டுபிடிப்பு

தமிழர்கள் மதுப் பழக்கத்துக்கு ஆளாவதற்குக் காரணம், தமிழ்நாட்டில் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் ஆட்சி இல்லையே; அந்நியர் ஆட்சி நடக்கிறதே என்ற கவலைதான் என்ற “அரிய” கண்டுபிடிப்பை தனது ‘எழுகதிர்’ ஏட்டில் எழுதியிருக் கிறார், அரு. கோபாலன்.

“நம்மைப் பொறுத்தவரை உலகில் எந்த நாட்டுக்கு மதுவிலக்குத் தேவையோ இல்லையோ! தமிழ்நாட்டுக்குக் கட்டாய முழு மதுவிலக்கு தேவை, தேவை, தேவை.

ஆம்; ஆயிரம் ஆண்டுக்கும் மேலாகச் சொந்த ஆட்சி இல்லாமல் எவரெவருக்கோ அடிமையாகவுள்ள தமிழன் அடிமனத்தில் ஒருவித ஏக்கம் படிந்து, அது அவனை அலைக்கழிக்கிறபோதெல்லாம் அவன் தன்னை மறந்து ஏதோ ஒரு மயக்கத்தில் இருக்கவே விரு(ம்புகிறான். அந்த விருப்பம் அவனை மதுவுக்கு அடிமையாக்குகிறது.

அதனால்தான் இந்தியாவின் பிற மாநிலங்களில் எங்கும் தமிழைக் காண முடியாவிட்டாலும், மதுக்கடைகளில் மட்டும் தப்பும் தவறுமாகவாவது ‘சரயக்கட’, ‘மதுக்கிட’ என்பது போன்று தமிழில் எழுதி வைத்திருக்கிறார்கள்.”

**‘எழுகதிர்’ ஜூன் 2017, பக்.20**

இப்படி ஒரு ஆராய்ச்சிக்காக ‘நோபல்’ பரிசே வழங்கலாம்!

## ஈரோடு தெற்கு மாவட்டம் களமிறங்குகிறது

# 10 நாட்கள் தொடர் தெருமுனைக் கூட்டங்கள்

திராவிடர் விடுதலைக் கழக ஈரோடு தெற்கு மாவட்ட நிர்வாகிகளின் கலந்துரையாடல் கூட்டம் சூரம்பட்டி வலசு பெரியார் ஜெ.சி.பி. பணிமனையில் மாநில அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது. 24.6.17 முதல் 3.7.17 முடிய பத்து நாட்கள் தொடர்ச்சியாக, தினமும் இரண்டு இடங்களில் தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி,

ஜூன் 24 - லோகநாதபுரம்,மோளக்கவுண்டன் பாளையம், ஜூன் 25 - வைராபாளையம், லட்சுமி தியேட்டர், ஜூன் 26 - சாஸ்திரி நகர், வாய்க்கால் மேடு, ஜூன் 27 -சூரம்பட்டி வலசு, சூரம்பட்டி போலீஸ் ஸ்டேசன், ஜூன் 28 - மரப்பாலம், கோணவாய்க்கால், ஜூன் 29 - பச்சப்பாளி, கொல்லம்பாளையம், ஜூன் 30 - கிருஷ்ணம்பாளையம், கருங்கல்பாளையம், ஜூலை 1 - ஆர்.என் புதூர், சி.எம் நகர், ஜூலை 2 - சூளை, கனிராவுத்தர் குளம், ஜூலை 3 - வளையக்கார வீதி, சின்னமாரியம்மன் கோவில்.

தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமி மற்றும் ‘மந்திரமா தந்திரமா’ நிகழ்ச்சிக்கு காவை இளவரசன் மற்றும் ஆத்தூர் மகேந்திரன் ஆகியோரை அழைப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. கலந்துரையாடலில், சண்முகப்பிரியன், கிருஷ்ணமூர்த்தி, சசி, இசைக்கதிர், சின்னதம்பி, சத்யராஜ், முத்துப்பாண்டி, சரவணன், ஆசிரியர் சிவக்குமார் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

## கழக கட்டமைப்பு நிதி நன்கொடை

பல்லடம் கழகத் தோழரும் நகர கழக அமைப்பாளருமான அனுப்பட்டி கோவிந்தராஜ், அனுப்பட்டி கழகத் தோழர் செம்பரிதி ஆகியோர் கழக கட்டமைப்பு நிதியாக தலா ரூ.2500/-த்தை பொருளாளர் திருப்பூர் துரைசாமியிடம் வழங்கினர். சேலம் ஓய்வு பெற்ற தாசில்தார் பாலகிருட்டிணன், ஃபாரூக் குடும்ப நிதியாக ரூ.5000/-த்தை கழகப் பொருளாளரிடம் வழங்கினார்.

# கரூரில் மதவெறி அரசியல் கண்டன கருத்தரங்கம்



பா.ஜ.க. மதவெறி அரசியலை தோலுரிக்கும் கருத்தரங்கம் 7.6.2017 அன்று மாலை கரூர் திருநீலகண்டர் திருமண மண்டபத்தில் ‘கல்வி மேம்பாட்டுக் கூட்டமைப்பு’ தலைவர் மா. இராமசாமி தலைமையில் நடந்தது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார். உரையாற்றிய தோழர்கள் விவரம்:

ம. காமராசு (தமிழர் பண்பாட்டுப் பேரவை), இரா. முல்லையரசு (கரூர் மாவட்ட செயலாளர், ஆதி தமிழர் பேரவை), மலையூர் ஆறுமுகம் (கல்வி மேம்பாட்டு கூட்டமைப்பு), பழனிச்சாமி (சமூக செயற்பாட்டாளர்) ஆகியோர் முன்னிலை வகித்து உரையாற்றினர். இரா. காமராஜ் (கரூர் மாவட்ட மாணவரணி அமைப்பாளர்) வரவேற்புரையாற்றினார். மற்றும் திருமதி கிறிஸ்டினா சாமி (தலைமைக் குழு உறுப்பினர், சுயராஜ் இந்தியா), முகிலன் (சுற்று சூழல் பாதுகாப்பு இயக்கம்), வழக்கறிஞர் பெ. ஜெயராமன் (மாவட்ட செயலாளர் விடுதலை சிறுத்தைகள் கட்சி), எம்.எம். ஷேக் அமானுல்லா (மாவட்ட தலைவர் மனிதநேய மக்கள் கட்சி), ஜாபர் (SDBI பள்ளபட்டி), வழக்கறிஞர் இராம. இராஜேந்திரன் (தலைவர், கரூர் தமிழ்ச் சங்கம்), ந. விஸ்வநாதன் (காவிரி ஆறு பாதுகாப்பு இயக்கம்), பால சசிக்குமார் (மாநில ஊடகப் பிரிவு செயலாளர்), தலித் பாண்டியன் (குடியரசு கட்சி). வழக்கறிஞர் இரா. முருகேசன் (குடியுரிமை பாதுகாப்பு நடுவம்), எம். ஜாகீர் உசேன் (மாவட்ட பொறுப்பாளர், மனிதநேய ஜனநாயக கட்சி), மோகன் குமார் (மாவட்ட தலைவர், ஆதி தமிழர் கட்சி), கு.கி. தனபால் (மாவட்ட தலைவர், தந்தை பெரியார் திராவிடர் கழகம்) ஆகியோர் உரையாற்றினர். ம.முத்து நன்றியுரை ஆற்றினார். முடிவில் அனைவருக்கும் மாட்டிறைச்சி உணவு வழங்கப்பட்டது.

# கடவுள் தந்த நோய்க்கு மருந்து கண்டுபிடித்தவர் ஆத்திகரா? நாத்திகரா?

‘உணர்வு’ என்ற இஸ்லாமிய வார ஏடு தொடர்ந்து கடவுள் - மத எதிர்ப்பாளர்களுக்கு எதிராக கட்டுரைகளை வெளியிட்டு வருகிறது. இந்த வாரம் (ஜூன் 16-22) வெளி வந்துள்ள ஒரு கட்டுரை இப்படி கூறுகிறது:

“வரலாறு தோன்றிய காலத்திலிருந்து மனித வாழ்க்கையின் முன்னேற்றத் திற்கும், அவர்களின் இன்னல்களைப் போக்குவதற்கும் அற்புதமான கண்டு பிடிப்புக்களை வழங்கிய சிந்தனையாளர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். சான்றாக எழுத்துக் கலைக்குக் காகிதத்தை உருவாக்கும் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்த ‘சாயிலூன்’, அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்த ‘குட்டன்பர்க்’, தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த ‘சிங்கர்’, எந்திரங்கள் பலவற்றிற்கும் அடிப்படை விதியாக இருக்கும் நெம்புகோல் தத்துவத்தைக் கண்டுபிடித்த ‘ஆர்க்கிமெடிஸ்’, டீசல் எந்திரத்தைக் கண்டுபிடித்த ‘டீசல்’, ரேடியோவைக் கண்டுபிடித்த ‘மார்க்கோனி’, தொலைபேசியைக் கண்டுபிடித்த ‘அலெக்சாண்டர் கிரகாம்பெல்’, இரத்தச் சுழற்சியை கண்டுபிடித்த ‘வில்லியம் ஹார்வி’, பென்சிலினைக் கண்டுபிடித்த ‘அலெக்சாண்டர் பிளமிங்’, இளம்பிள்ளைவாதம் அம்மை நோய்களுக்குத் தடுப்பூசியைக் கண்டுபிடித்த ‘ஆல்பிரட் சாபின்’ மற்றும் ‘எட்வார்டு ஜென்னர்’, காலரா மற்றும் மலேரியா நோய்களுக்கு மருந்துகளைக் கண்டுபிடித்த ‘ராபர்ட் கோச்’ மற்றும் ‘ரொனால்ட் ரோஸ்’ எனப் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது. மனித வாழ்க்கைக்குப் பெரிதும் பயனளிக்கும் மேற்கண்டவைகளைப் போன்ற அற்புதமான அன்பளிப்புக்களை வழங்கியவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் கடவுள் நம்பிக்கையும் மத நம்பிக்கையும் உள்ளவர்களே” - என்று எழுதுகிறது ‘உணர்வு’ ஏடு.

அறிவியலை கண்டுபிடித்தவர்கள், கடவுள், மத நம்பிக்கையாளர்கள் என்றே வாதத்துக்கு ஏற்றுக் கொள்கிறோம்.

இவர்கள் கண்டுபிடிப்புக்கு கச்சாப் பொருளாக இருந்தது - கடவுளும், மதமும் தானா ? அல்லது அறிவியலா ?

அனைத்து வல்லமையும் கொண்ட கடவுளும், கடவுள் உருவாக்கிய மதமும் தான் அம்மை நோயையும், பிளேக் நோயையும் மனித குலத்துக்கு தந்தது என்பதை உண்மையான கடவுள் மத பக்தர்களாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

அப்படி கடவுளால் தரப்பட்ட நோயை எதிர்த்துத் தானே மருந்தை கண்டுபிடித்தார்கள்.

அப்படியானால் இவர்களின் அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆத்திகமா ? நாத்திகமா ?

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd June 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN